அறிவிப்பு எண் : 02/2026 **தேதி: 04.06.2026**

திட்ட விவரங்கள் – கோயம்பேடு 304 பன்னடுக்குமாடி குடியிருப்பு


முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை

சென்னையின் முதன்மையான இடமான கோயம்பேட்டில் உங்கள் வாழ்க்கை முறையை உயர்த்துங்கள்.

சென்னை, கோயம்பேட்டில் அமைந்துள்ள உயர் வருவாய் பிரிவைச் (HIG) சேர்ந்த 79 அடுக்குமாடி குடியிருப்புகளை இணையதளத்தில் "முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை" என்ற அடிப்படையில் விற்பனை செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் (TNHB) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.



கண்ணோட்டம்



அலகுகள் ஒதுக்கீடு:

தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு பொதுவான தொகுப்பு மூலம், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை (FCFS) என்ற அடிப்படையில் இணையதளம் மூலம் அலகுகள் (அடுக்குமாடி குடியிருப்புகள்) ஒதுக்கீடு செய்யப்படும்.

யார் விண்ணப்பிக்கலாம்?

தகுதி நிபந்தனைகள்:

ஒரு அலகைப் பெறுவதற்கான தகுதி என்னவென்றால், விண்ணப்பதாரர் (i) தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவராகவும், (ii) 21 வயது நிரம்பியவராகவும், (iii) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து தனது பெயரிலோ அல்லது கணவர் / மனைவி பெயரிலோ அல்லது மைனர் குழந்தைகள் பெயரிலோ எந்தவொரு மனை, வீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்பையும் வாங்கியிருக்கக் கூடாது.

மாதாந்திர வருமான உச்சவரம்பு:

மேற்கண்ட பொதுவான தகுதிகளைத் தவிர, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டத்தின் கீழ் மனைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகளை வாங்குவதற்கு தனிநபர்கள் பின்வரும் வருமான அளவுகோல்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

உயர் வருவாய் பிரிவு (HIG) கீழ் வருபவர்கள் மாத வருமானம் ரூ.70,000/–க்கு மேல் இருக்க வேண்டும்.

அதிக வருமானப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் குறைந்த வருமான வகை மனை/அடுக்குமாடி குடியிருப்பு/வீடு (பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவை (EWS) தவிர) வாங்க விரும்பினால், அத்தகைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

Verified RealEstate

சில முக்கியமான தேதிகள்

வ. எண்	நிகழ்வுகள்	நாள்
1	இணையதள விண்ணப்ப செயல்முறை காலை 10:00 மணிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அதிகாரப்பூர்வ வலைத்தளம் மூலம் தொடங்குகிறது.	05-06-2026
2	இணையதள விண்ணப்ப செயல்முறை முடிவடையும் நாள்.	31-03-2027

விண்ணப்பிக்கும் முறை

இணையதள விண்ணப்பம்:

ஆர்வமுள்ள தகுதியுள்ள நபர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திற்கு (https://tnhb.tn.gov.in & https://propertysales.tnhb.tn.gov.in) சென்று கைபேசி எண் மற்றும் இதர விவரங்களைப் பயன்படுத்தி உள்நுழைவுச் பதிவுகளை உருவாக்கி, பின்னர் அவற்றைப் பயன்படுத்தி உள்நுழைய வேண்டும்.

ஆர்வமுள்ள தகுதியுள்ள நபர்கள் https://tnhb.tn.gov.in என்ற வலைத்தளத்தை அணுகி, முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படை மூலம் விற்பனைக்கான அலகு விவரங்களைப் பெறலாம். அளவு, இடம், விலை, தளவமைப்பு, அடித்தளப் பகுதி, பிரிக்கப்படாத பங்கு, பரப்பளவு, கட்டிட முகப்பு, வகை வாரியான தரைத் திட்டம், திட்ட புகைப்படங்கள் மற்றும் படங்கள், வசதிகள் போன்ற விவரங்கள் வழங்கப்பட்டிருக்கும்.

ஆர்வமுள்ள தகுதியுள்ள பொதுமக்கள் பதிவுசெய்து, உள்நுழைவு பதிவுகளை உருவாக்கி, தேவையான ஆவணங்களுடன் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். குடியிருப்பு மனைகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் / வீடுகளை விற்பனை செய்வதற்கான அனைத்து விண்ணப்பங்களும் உரிய கட்டணத்துடன் இணையதளம் மூலம் பெறப்படும்.

தகுதியுள்ள அனைத்து நபர்களும் தங்களுக்கு விருப்பமான அடுக்குமாடி குடியிருப்புகள் / மனைகள் / வீடுகளை "முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை" என்ற அடிப்படையில், அந்தந்த ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்குள் அல்லது பொருந்தக்கூடிய பொதுவான தொகுப்பு மூலம் முன்பதிவு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இணையதளம் மூலம் ஒரு குறிப்பிட்ட

பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அவர்/அவள் ஆரம்ப தொகை, விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணத்தை இணையதளத்தில் நியமிக்கப்பட்ட கட்டண நுழைவாயிலை **(Internet Banking or Debit Card or IMPS)** பயன்படுத்தி ஒரே பரிவர்த்தனையில் வைப்பு செய்ய 20 நிமிட அவகாசம் வழங்கப்படும்.

ஆவணங்களைப் பதிவேற்றுதல்

விண்ணப்பதாரர் தனது வயது / பூர்வீகம் / வருமானம் / நிரந்தர கணக்கு எண் / ஆதார் / ஊடுகதிர் (Scan) செய்யப்பட்ட கையொப்பம் / இடஒதுக்கீட்டுச் சான்றிதழ் ஏதேனும் இருந்தால், விண்ணப்பதாரரின் புகைப்படத்தின் மென் நகல் (Soft copy) அல்லது இணையதள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் ஆவணங்களை நிரூபிக்கும் விதமாக மேற்கூறிய அனைத்து தேவையான ஆவணங்களையும் பதிவேற்ற வேண்டும்.

மேலும் தகவலுக்கு, எங்கள் வலைத்தளத்தில் உள்ள நடைமுறைகள் மற்றும் பொது விதிமுறைகள் & நிபந்தனைகளைப் பார்க்கவும்.

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படை மூலம் நேரடியாக வாங்குவதற்கு பொருந்தக்கூடிய கட்டணம்

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படை மூலம் நேரடியாக வாங்குவதற்கு, விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில் உங்கள் பதிவு செய்யப்பட்ட கணக்கு மூலம் நியமிக்கப்பட்ட கட்டண நுழைவாயில் **(Internet Banking or Debit Card or IMPS)** பயன்படுத்தி இணையதள மூலம் ஆரம்ப தொகை (அலகு தொகையில் 10%), விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணத்தை இணையதளத்தில் செலுத்த வேண்டும். வகையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட கட்டண விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன:

வகை	ஆரம்ப தொகை (அலகு தொகையில் 10%)	விண்ணப்பக் கட்டணம் (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட)	பதிவு கட்டணம்
HIG	₹ 1443300 - 1454000	₹ 590	₹ 200

கட்டணம் செலுத்தும் முறை

ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மீதமுள்ள 90% தொகையை ஒதுக்கீட்டாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மின்–சேவை தளத்தில் உங்கள் பதிவுசெய்யப்பட்ட கணக்கைப் பயன்படுத்தி நியமிக்கப்பட்ட கட்டண நுழைவாயில் வழியாக

இணையதளத்தில் அல்லது மின்–சலான் மூலம் பகுதி அல்லது முழு கட்டணமாக செலுத்த அனுமதிக்கப்படுவார்.

அலகு விவரங்கள்

வ. எண்	வகை	அலகுகளின் எண்ணிக்கை	பரப்பளவு (சதுர அடியில்)	பிரிக்கப்படாத நிலப் பங்கு (சதுர அடியில்)	விற்பனை விலை
1	HIG	79	1458 - 1469	393 - 396	144 L to 146 L

வசதிகள்

1. குழந்தைகள் நீச்சல் குளம் கொண்ட கிளப் ஹவுஸ் (G+1)
2. மின்தூக்கிகள்
3. மின்தூக்கிகள் மற்றும் பொதுவான பகுதிக்கான மின் காப்பு வசதிகள் (ஜென்செட்)
4. அனைத்து கட்டிடத்திற்க்கும் சோலார் பேனல்
5. CMWSSB–லிருந்து பிரத்யேக நீர் வழங்கல் இணைப்பு
6. வாகனம் நிறுத்துமிடம்
7. நடைபாதை & பூங்கா

பாதுகாப்பு

1. சிசிடிவி கண்காணிப்பு
2. தீயணைப்பு ஏற்பாடுகள்
3. மின்னல் தடுப்பான் வசதி மற்றும் "விமான வழிகாட்டி விளக்கு"

இருப்பிட நன்மைகள்

1. CMBT மெட்ரோ நிலையத்திற்கு 0.5 கி.மீ
2. கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு 0.5 கி.மீ
3. கோயம்பேடு சந்தைக்கு 1.00 கி.மீ

மனை இருப்பிடம் (புவி குறிச்சொல்): https://maps.app.goo.gl/2VAvzaeuDHyBDt9H8

RERA Number: TN/29/BUIDLING/0088/2020

மேலும் தகவலுக்கு மற்றும் இணையதளத்தில் பதிவு செய்ய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: (https://tnhb.tn.gov.in & https://propertysales.tnhb.tn.gov.in).

பொதுவான நடைமுறை மற்றும் விதிமுறைகள் & நிபந்தனைகள் பொருந்தும் (English | Tamil)

அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்

உதவி பொறியாளர்	மேலாளர் (வி&சே)	செயற்பொறியாளர் & நிர்வாக அலுவலர்
(9176026139)	(9884507085)	(9566289565)

எங்களைத் தொடர்பு கொள்ள

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் (TNHB) தலைமை அலுவலகம் மற்றும் கோட்ட அலுவலகங்களுக்கான அலுவலக இடங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் உள்ளது. இந்தத் தகவலை அணுக, வலைத்தளத்தைப் பார்வையிட்டு "எங்களைத் தொடர்பு கொள்ள" (Contact Us) என்ற பொத்தானை சொடுக்கவும்.

வாடிக்கையாளர் கட்டணமில்லா தொலைபேசி எண்

உதவிக்கு, தலைமை அலுவலகத்தில் ஒரு பிரத்யேக அழைப்பு மையம் உள்ளது. விண்ணப்பதாரர் / ஒதுக்கீடு பெற்றவர் அவர்களை பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளலாம்:

- கட்டணமில்லா தொலைபேசி எண் (Toll Free Number): 1800-599-6060

- புலனம் (Whatsapp): 9566289561

Verified RealEstate ™